1995 மார்ச் 29]

இருக்கிறது. அது தற்சமயம் 10 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து குளிரூட்டக் கூடிய திறன் உடையது. தற்சமயம் அங்கே 7 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு குளிரூட்டப்படுகிற காரணத்தால் மேலும் பால் உற்பத்தி அதிகரித்தாலும்கூட, அதையே பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை இருப்பதால் விருத்தாசலத்தில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 152, திரு. செ.து. வரதராஜன், இருக்கையில் இல்லை.

வினா எண் 153, திருமதி ஜீனத் சர்புதீன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

153—

பெண் குழந்தைகளுக்கு வைப்பு நிதி அளித்தல்

9025*—திருமதி ஜீனத் சர்புதீன்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண் குழந்தை பிறந்த பின் கருத்தடை அறுவை செய்து கொண்டால், அந்த பெண் குழந்தையின் பேரில் ரூபாய் இரண்டாயிரம் வைப்பு நிதி அளிக்கும் திட்டத்தின் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவரம் அடங்கிய அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த தம்பதிகள் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிறகு யாரேனும் ஒருவர் கருத்தடை அறுவை

சிகிச்சை செய்து கொண்டால் அந்தக் குழந்தையின் பெயரில் ரூ. 5,000 வைப்பு நிதியாக அரசுக் கணக்கில் வைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியின் மூலம் மேற்படி குழந்தையின் பிறந்த நாள், பள்ளிப்படிப்பு, மேற்படிப்பு மற்றும் திருமணம் போன்றவைகளுக்கு கீழ்க்கண்டவாறு உதவித்தொகை அளிக்கப்படுகிறது:

(1)	முதல் பிறந்த நாளின்போது ..	2 கிராம் அல்லது ரூ. 800 மதிப்புள்ள தங்க மோதிரம்.
(2)	பள்ளியில் சேரும்போது ..	ரூ. 250
(3)	6-ம் வகுப்பு சேரும்போது ..	ரூ. 500
(4)	9 முதல் 12-ம் வகுப்பு வரை 4 வருடங்களுக்கு வருடத்தில் 10 மாதத்திற்கு மாதம் ரூ. 50 வீதம் ..	ரூ. 2,000
(5)	20 வயது முடிந்து திருமணத்திற்காக (அல்லது மேல்படிப்பு தொடர) ..	ரூ. 20,000

2. பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கவும், அவர்கள் படிப்பை இடையில் நிறுத்தி விடுவதை தவிர்க்கவும் அரசால் மேற்படி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

3. பெண் குழந்தையின் பிறந்த நாளின்போதும், 20 வயது முடிந்து திருமணம் அல்லது மேற்படிப்புக்காகவும் வழங்கப்படும் உதவித் தொகை மாவட்ட சமூக நல அலுவலரால் அளிக்கப்படும். குறைந்தது 10ஆம் வகுப்பாவது தேர்ச்சி பெற்று 20 வயது வரை மணமாகாத பெண்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் கீழ் ரூ. 20,000 உதவித் தொகை வழங்கப்படும். 10ஆம் வகுப்பு வரை படிக்கவில்லை என்றாலோ அல்லது 20 வயது பூர்த்தி அடைவதற்கு முன் திருமணம் செய்து கொண்டாலோ மேற்படி உதவித் தொகை வழங்கப்படமாட்டா.

4. **உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள்:**

(1) குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும்போது பெற்றோரின் வயது 40-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

1995 மார்ச் 29]

(2) பெற்றோருக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும். ஆண் குழந்தை உடையோர் உதவித் தொகை பெற இயலாது.

(3) பெற்றோரின் ஒரே பெண் குழந்தையோ அல்லது இரு பெண் குழந்தைகள் இருப்பின் இரண்டாவது பெண் குழந்தையோ இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறலாம்.

(4) இத்திட்டத்தில் சேரும் பெண் குழந்தைகளின் வயது 3 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(5) இத்திட்டத்தின் கீழ் பயனடைவோரின் குடும்பம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளதாகவும் அக்குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு குறைவாகவும் (1-4-93-லிருந்து ரூ. 12,000-க்கு மிகாமலும்) இருக்க வேண்டும்.

5. மேற்படி உதவித் தொகை பெறுவதற்காக இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட பெண் குழந்தை வளர்ந்து 20 வயதுக்கு முன்னர் மரணமுற்றால், அக்குடும்பத்தைச் சேர்ந்த 20 வயது பூர்த்தி அடையாத மற்றொரு பெண் குழந்தை இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம்.

6. இத்திட்டம் சமூக நல இயக்குநரால் செயற்படுத்தப்படும். சுகாதாரம், வருவாய் மற்றும் கல்வித் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களின் ஒத்துழைப்பால் இத்திட்டம் தொடர்புடைய/அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலரால் செயற்படுத்தப்படும்.

7. சமூக நலத் துறையால் வரையறுக்கப்பட்ட விண்ணப்பத்துடன் வயது சான்றிதழ், வருமான சான்றிதழ், குழந்தைகள் எண்ணிக்கை விபரம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டதற்கான மருத்துவ அலுவலரின் சான்றிதழ் போன்றவற்றுடன் சமூக நலத் துறையால் வரையறுக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை இத்திட்டத்தின் கீழ் உதவி பெற விரும்பும் நபர் மாவட்ட சமூக நல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட சமூக நல அலுவலர் விண்ணப்பத்தினை/விவரங்களை சரிபார்த்து இத்திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதியான நபர்களின் பெயரை பதிவு செய்வார். பின்னர் அப்பெண் குழந்தையின் பெயரில் ரூ. 5,000 அரசு உதவித் தொகையாக அரசு பொதுக் கணக்கில் சேர்க்கப்படும்.

[*1995 மார்ச் 29*

8. 1-4-1992-ல் இருந்து குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

9. இத்திட்டம் 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' என செயல்படுகிறது.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை படித்தேன். மாண்புமிகு ஆற்றல் மிக்க அமைச்சர் அவர்கள் அறிக்கையில் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் குடும்பக் கட்டுப்பாடு செய்தவர்கள் எண்ணிக்கை கண்டிப்பாக உயர்ந்திருக்கும். அப்படியானால் இதனால் பயன் அடைந்தவர்கள் எத்தனை பேர் என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் வாயிலாக பெண் குழந்தைகளுடைய கல்வியை ஊக்குவிப்பதற்கும் அவர்களுடைய படிப்பை இடையிலே தடுத்து நிறுத்தி விடுவதை தடுப்பதற்காகவும், அதே நேரத்தில் குடும்பக் கட்டுப்பாட்டை உயர்த்துவதற்காகவும் இந்தத் திட்டம் சிறப்பாக பணி புரிந்து இருக்கிறது. அந்த வகையில் 1992-93-ல் அதாவது 1 ஏப்ரல் 1992 முடிய 750 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். 1993-94-ல் 6,136 பேர் பயன்பெற்று இருக்கிறார்கள். 1994-95-ல் 10,304 குழந்தைகள் பயன்பெற்று இருக்கிறார்கள். அதனால் 17,190 பேர் இதிலே பயன் அடைந்து இருக்கிறார்கள். 28 பிப்ரவரி 1995 முடிய தங்க மோதிரம் பெற்ற குழந்தைகளுடைய எண்ணிக்கை 10,913 ஆகும். இதற்காக ரூபாய் 4 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புது யுகத்தை உண்டாக்கி பொன்னேடுகளில் பதித்து கொண்டிருக்கும் நமது புரட்சித் தலைவி அவர்களுக்கும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இந்தத் திட்டத்தை நினைக்கும்போது நெஞ்சம் இனிக்கிறது என்று சொல்லி அதோடு அந்த

1995 மார்ச் 29]

ஆப்பரேஷன் செய்துகொள்வதற்கு வயது 40 என்று வைத்து இருக்கிறீர்கள். அதை 45 என்று தளர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை பெற்றுக்கொள்வது 40 வயதிற்குள் இருந்தால்தான் அந்தக் குழந்தை ஆரோக்கியமாக இருக்கும் என்று கருதுகிறோம். அந்தக் குழந்தை 3 கிலோ எடை உடைய குழந்தையாக பிறக்க வேண்டும் என்றால் 40 வயதிற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது மருத்துவர்களுடைய நோக்கமாகும். அந்த வகையில் இதை 40 வயதாக வைத்திருக்கிறோம். 45 வயது என்று சொன்னால் அதற்குப் பின்னால் கருத்தடை செய்து கொள்வது அவர்களுடைய உடல்நிலையையும் பாதிக்கும், குழந்தையையும் பாதிக்கும் என்கின்ற காரணத்தால் தற்சமயம் அதை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கருத்தடை செய்து கொள்வதற்கு புள்ளிவிவரங்கள் நமது சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதை உயர்ந்த நோக்கத்துடன் அனுபவ ரீதியாக செயல்படுத்த வேண்டும் என்று அரசு இந்த ஆணையை விதித்து இருக்கின்றது. இதைச் செயல்படுத்தும் போது சிலருக்கு இந்த ஆபரேஷன் செய்துகொண்ட வகையிலே அவர்கள் மயக்க நிலையையும் அடைந்து விடுகிறார்கள். அவர்களில் சிலருக்கு சுவாதீனம் இல்லாமல் போய்விடுகிறது. இந்த மாதிரி புள்ளிவிவரங்களை இந்த அரசு ஏற்கனவே ஆராய்ந்து அதனைக் கணக்கில் வைத்துக்கொண்டிருக்கிறதா? அப்படியென்றால் எவ்வளவு பேர்களுக்கு அது ஆபத்தான நிலையை உண்டாக்கி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 குழந்தைகள்தான் ஒரு குடும்பத்திற்கு பொருத்தமான குழந்தைகளாக இருக்க முடியும். ஒரு ஆண் குழந்தை ஒரு பெண் குழந்தை அல்லது 2 பெண் குழந்தைகள். இப்படி இருந்தால் அந்தக் குடும்பம் சிறப்பாக இருக்கும். இன்றைக்கு இருக்கின்ற நிதி நிலைமைக்கு அந்த அளவான குடும்பம்தான் வளமான வாழ்விற்கு எடுத்துக்காட்டாகும். அந்த வகையிலேதான் 2 பெண் குழந்தைகள்

பெற்றவர்களுக்கு மட்டும் இந்தத் திட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். 2 பெண் குழந்தைகள் பெற்றுக் கொண்டு குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டால் இந்தத் திட்டத்தில் அவர்கள் பயன் அடையலாம் என்று தெரிவித்து இருக்கிறோம். அது வளமான குடும்பத்திற்கு வழி வகுப்பதற்காகவும், பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகவும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கை ஆகும். இதிலே மயக்கம் அடைவது, உடல் நலம் சரியில்லாமல் போவது இதையெல்லாம் மருத்துவத் துறையிடத்திலே கேள்வியாகப் போடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் குழந்தைகள் பிறந்த பின்பு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால் நிதி உதவி செய்வதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படிச் செய்கின்ற அந்த நிதி உதவியை இன்றைக்கு அரசுக்கு பேருதவியாக இருந்து கொண்டிருக்கின்ற சிறு சேமிப்பிலே முதலீடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதை 5000 ரூபாய் டெப்பாசிட் தொகையாக அவர்களுக்கு வழங்குகின்றது. அந்த டெப்பாசிட் தொகை 20-ஆவது வயதில் அந்தக் குழந்தைக்கு 20,000 ரூபாயாக கொடுக்கப்படுகிறது. நடுவிலே அந்தக் குழந்தைகளுடைய பிறந்த நாளுக்கு தங்க மோதிரமும், அந்தக் குழந்தைகளுடைய ஒவ்வொரு ஆண்டு படிப்புச் செலவிற்கும் நாங்கள் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இது முழுக்க முழுக்க இந்தத் துறையினாலே மட்டும் செய்யப்படக்கூடிய காரியமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருடைய கேள்வி, அப்படி டெப்பாசிட் செய்கிறபோது அது சிறுசேமிப்பிலே டெப்பாசிட் செய்யப்படுமா என்பதுதான்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: தலைவர் அவர்களே, சமூகநலத்துறையே நிதித்துறையின் மூலமாக டெப்பாசிட் செய்திருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 154, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.